**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

# CC.NO- 58/2024

## Dated :17.03.2026

## Deposition of witness for : P.W.4

## List of Witness LW4 Examined as PW4 (Eye Witness )

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துலெட்சுமி | வயது | : | 47 |
| கணவர் பெயர் | : | சுப்பிரமணி | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | குப்பையன்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1, 2 எதிரிகள் ஆஜர்)

**சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகளை எனக்கு தெரியும். கடந்த 2-3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மதியம் சுமார் 12.00 மணியளவில் நான் எனது கொல்லையில் பூ பறித்துக்கொண்டிருந்தேன். அப்போது, ஆதனக்கோட்டை கடை வீதியில் இருந்து எனக்கு தெரிந்த நபர் எனக்கு போன் செய்து, அ.சா.1 மற்றும் அ.சா.2 அழுதுகொண்டிருப்பதாக சொன்னார். சம்பவம் கேள்விப்பட்டு, நான் உடனடியாக நான் ஆதனக்கோட்டைக்கு சென்றேன். அங்கு பேருந்து நிறுத்தத்தில் அ.சா.1 மற்றும் அ.சா.2 இருந்தார்கள். அ.சா.2க்கு தலையில் காயம் இருந்தது. அ.சா.1- கை தூக்க முடியாமல் இருந்தார். அவர்கள் இருவரையும் பேருந்து மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்று, சிகிச்சையில் சேர்த்தேன். மருத்துவமனையில் இருந்த போது, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர் தங்களை இடப்பிரச்சினை காரணமாக மாரிமுத்து அடித்துவிட்டதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**( சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கை ஆதரிக்காமல் சாட்சியம் அளித்ததால், சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய பிரிவு 157 Bharatiya sakshya Adhinayam'2023 சட்டத்தின் படி அரசு வழக்கறிஞர் வேண்டுகோள் விடுத்தார். அதனால், நீதியின்**

**<u>பொருட்டு, சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு வழக்கறிஞருக்கு அனுமதி வழங்கப்பட்டது)</u>**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

கடந்த 20.09.2023 ஆம் தேதி, மதியம் சுமார் 01.00 மணியளவில் நானும் அ.சா.1ம் அ.சா.1 வீட்டில் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. அப்போது அங்கு வந்த எதிரிகள் இருவரும் அ.சா.1யிடம் சொத்து சம்மந்தமாக பிரச்சினை செய்து, 1ஆம் எதிரியானவர் அ.சா.1-ஐ பார்த்து அசிங்கமான வார்த்தையால் பேசினார் என்றால் சரியல்ல. அப்போது 2ஆம் எதிரி, 1ஆம் எதிரியிடம் அவளை அடிடா என்று சொன்னவுடன், 1ஆம் எதிரி அருகில் கிடந்த ஆர்எஸ்பதி கம்பை எடுத்து, அ.சா.1இன் வலது தோள்பட்டையில் அடித்தார் என்றால் சரியல்ல. அ.சா. 2 சண்டையை விலக்கிய போது, 1ஆம் எதிரி அ.சா.2 இன் தலையில் அடித்தார் என்றால் சரியல்ல. அதனால் அ.சா.1-க்கு வலது தோள்பட்டையிலும் அ.சா.2-க்கு தலையிலும் காயம் ஏற்பட்டது என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க அவர்களை வழக்கில் இருந்து காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள், எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு, குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை– இல்லை.**

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.17 17:00:48 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
**(CHAPTER XXIII BNSS)**

**<u>CC.NO- 58/2024</u>**

**Dated :17.03.2026**

**Deposition of witness for : P.W.5**

**List of Witness LW6 Examined as PW5 (Mahazar Witness )**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இந்துஜா | வயது | : | 33 |
| கணவர் பெயர் | : | மாரிமுத்து | தாலுகா | : | புதுக்கோட்டை |
| கிராமம் | : | குப்பையன்பட்டி | தொழில் | : | விவசாயம் |

Solemly affirmed by Tmt. Vijayalakshmi, Junior Assistant of this court in accordance with the provisions of Act X of 1873.

**Counsel present.**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC.No.74663/2025/F1. DATED 21.02.2025 the identify of the witness verified with their identity card.**
**Aadhar Card of the Witness verified.**

(1, 2 எதிரிகள் ஆஜர்)

**<u>சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். நான் கடந்த 20.09.2023 ஆம் தேதி, எனது கணவர் மாரிமுத்துக்கும் அ.சா.1-க்கும் இடையே சண்டை நடைபெற்றது. மறுநாள் 21.09.2023 ஆம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில், நானும் லெட்சக்குமார் என்பவரும் சம்பவ இடம் அருகில் பேசிக்கொண்டிருந்த போது, போலிசார் சம்பவம் குறித்து விசாரணை செய்து, சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். அதற்காக எங்களிடம் சாட்சி கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். பார்வை மகஜரில் நானும் லெட்சக்குமார் என்பவரும் கையொப்பம் செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1) போலிசார் கையொப்பம் போட சொன்னதால் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. நான் கையொப்பம் செய்த பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்துப்பார்த்தேனா என்றால் இல்லை. எங்கு வைத்து கையொப்பம் பெற்றார்கள் என்றால் சம்பவம் நடந்த இடத்தில் வைத்து கையொப்பம் பெற்றார்கள். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு, போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சம்பவ இடத்தில் வைத்து கையொப்பம் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சியின் கையொப்பம்**

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம், என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு, விளக்கி கூறப்பட்டு, சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.**

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.17 17:00:56 +0530

**என்.சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**